Registered No. M 5068.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரிஹு ஆவணிமீ 29உ 13—9—1948 ஹிஜ்ரி 1367 துல்கஃதாமீ 9உ திங்கட்கிழமை. } இதழ் 33

எல்லை காந்திக்கு அபாயம்!

ஆகாரத்தில் விஷம்?

பிஷாவர் செப் 1—

சில மாதங்களாக எல்லை மாகாண சர்க்கார் பாதுகாப்புக் கைதியாக சிறையிலிருந்து வரும் எல்லை காந்தி பாதுஷாக்கான் உடல் நிலை புரிந்து கொள்ள முடியாத வகையில் நாளுக்குநாள் அபாயகரமான நிலைமை அடைந்துவருவதாக இங்கு பலமான வதந்திகள் உலவுகின்றன அரசாங்கத்தைக் கவிழ்க்க பாதுஷாகான் இப்பி பக்கிரியுடன் சேர்ந்து சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டது அனைவருக்கும் தெரியும். அவருடைய குடும்பம் பூராவுமே இன்று சிறைக்குள் திணிக்கப்பட்டிருக்கிறது.

எல்லைப்புரத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர் பாதுஷாகான் உயிருடனிருக்கும்வரை அங்கு பாகிஸ்தான் அடைந்திருக்கும் இயற்கைக்கு விரோதமான ஆதிக்கம் பலமடைய முடியாதென்று அவரைக் கைது செய்த பிறகு எல்லைப்புர சர்க்கார் உணர்ந்துவிட்டது. கான் சகோதரர்களை விடுவிக்க செஞ்சட்டையினர் செய்யும் கிளர்ச்சி பலமடைந்து வருகிறது. பாகிஸ்தான் ராணுவம் சமீபத்தில் பாதுஷாகானைச் சேர்ந்த இருநூறு பேரைச் சுட்டுக்கொன்றும் ஐநூறு பேரைக் காயப்படுத்தியுமிருக்கிறது.

எல்லைப்புரத்தின் உண்மையான தலைவரை சிறைக்குள் கொன்றுவிடுவதற்காகவே பாதுஷாகானும் இப்பி பக்கிரியும் சேர்ந்து சதி செய்ததாக பீர்மான்கி ஷரீப் சாடு கட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. பாதுஷாகானுக்கு அளிக்கப்படும் உணவில் ஏதோ ஒரு விஷம் கலந்து கொடுக்கப்படுவதாகவும் அது நாளாவட்டத்தில் அவரைக் கொன்றுவிடுமென்றும் திடுக்கிடத்தக்க வதந்திகள் இங்கு பரவி வருகின்றன.

சிறையிலிருக்கும் தலைவர்களின் உடல்நிலையைப் பரிசோதித்த டாக்டர்கள் பாதுஷாகானுக்கு இருந்து வரும் நூதனமான, விசித்திரமான வியாதியைக் குறித்து ஆச்சரியம் தெரிவித்தனர்.

பாதுஷாகான் உடல்நிலையைக் குறித்து விசாரணை நடத்தவேண்டுமென்று இங்கு ஜனங்கள் கோருகின்றனர். ஆயினும் தன் ஆசைகளில் மண்ணை அள்ளிப் போட்டுவிடக்கூடிய சக்தி வாய்ந்த ஒரு எதிரிக்கு சந்தர்ப்பம் கிடைப்பதை பீர்மான்கி ஷரீப் விரும்பவில்லை. அவருக்கு எதிராக மிஸ்டர் ஜின்னாவும் எல்லைப்புர பிரதமர் அப்துல் கையூம்கானும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருந்து வருகின்றனர்.

ஒன்றும் செய்ய முடியாத வகையில் பாதுஷாகான் உடலைக் கெடுத்துவிட்டு அல்லது கொன்றுவிட்டு முதலில் எல்லைப்புரத்திலும் பிறகு மலை ஜாதியினர் பிரதேசத்திலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள பீர்மான்கி ஷரீப் கோஷ்டி முயற்சிக்கின்றது. ஆனால் பீர்மான்கி ஷரீப் கோஷ்டியோ அல்லது பாகிஸ்தானோ எவர்களாயினும் சரி, கான் சகோதரர்களின் ஒத்துழைப்பின்றி எல்லைப் புரத்தில் நிலைக்க முடியாதென்பது நிச்சயம். எனவே விடுதலை செய்து அவர்களுடைய தயவை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை

வளரும் ஜனநாயகம் - 7.

—: தராசு :—

ஜனநாயக தேசங்களில், கட்சி முறையின்படி அரசு நடக்கும்போது, அரசியல் நெருக்கடி ஏற்படுமேயானால், அப்பொழுது கட்சி முறையைத் தவிர்த்து, ஒரு தேசிய குழுவினர் அல்லது கட்சி சார்பற்றவர் பதவியேற்பது வழக்கம்; இம்முறைப்படி பார்த்தால் கட்சியரசானது அரசியல் துறையில் அதிலும் ஜனநாயகத்தில் அவ்வளவு உயர்ந்த முறையாகக் கருதப்படவில்லை என்று அறிய முடிகிறது. கட்சி சார்பற்ற முறையிலும் அரசாங்கத்தை நடத்த முடியுமென்றும் தெரிந்துகொள்ள முடிகிறது. நெருக்கடியான சமயத்தில் தேசிய அரசு விரும்பத்தக்கது என்றால் சமாதான காலத்திலும் சாத்யம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளமுடியும். சமாதான காலத்தில் உயரிய முறையில் நிர்வாகத்தை நடத்த முடியும், ஜனநாயகத்தையும் வளர்க்க முடியும் என்று கூறலாம்.

கட்சி சார்பற்ற முறையில் ஒரு சட்டசபை இருப்பதிலும் கஷ்டமேற்படும் என்று தோன்றவில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தின்மீது ஓட்டெடுக்கும்போது ஒரே விதமாக நினைக்கும் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் ஆதரித்து ஓட்டளிப்பார்கள். கட்சியுணர்ச்சியில்லாமலிருந்தால் சட்டசபையில் விவாதிக்கப்படும் எந்தப் பிரச்னையின்மீதும் ஏற்படும் முடிவானது, கட்சி முறையிலேற்படுவதைவிட சிறப்பாகவேதானிருக்கும்; சில சமயங்களில் எதிர்ப்பு ஏற்பட்டாலும், அதுவும் கட்சி சார்பற்றதாகத்தானிருக்க முடியும். கட்சியற்ற முறையினால் அரசாங்கத்தையே கவிழ்த்துவிட முடியுமே என்ற சந்தேகத்தை சிலர் சொல்லக்கூடும். தலைவரின் கீழ் கட்டுப்பாட்டுடன் கூடின கட்சி முறையை கையாளுவதனால் இம்மாதிரியான சந்தேகங்கள் தோன்ற முடியாது என்று சொல்லலாம். சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர்கூடி அரசாங்கத்தை கவிழ்ப்பது என்ற சந்தேகமானது ஜனநாயகத்தின் மேல் நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது. வாக்காளர்களின் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லோருமோ அல்லது பெரும்பான்மையோரோ நடைமுதல் அரசை விரும்பவில்லையென்றால், அதை மாற்றியமைப்பதுதான் ஜனநாயகமாகும். இம்மாதிரியான ஒரு திட்டம் செக் அரசாங்கத்திலிருக்கிறது. ஜனநாயக அரசில் விரும்பாத அரசை கவிழ்ப்பது என்பது மிகைப்பட்ட ஒரு கற்பனையாகும். உண்மையில் விரும்பாதபொழுது அரசாங்கம் நிச்சயமாக மாற்றியமைக்கப்பட்டுவிடும்.

அமெரிக்காவில் நடைபெறும் அரசியல் முறையும் தலைவரின் முறையும் ஓரளவு முற்போக்குத் தன்மையாகத்தானிருக்கிறது; இம்முறையின் மூலம் ஒரு ஸ்திரமான அரசு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அமைந்துவருகிறது; ஆனால் நடைமுறையில் ஒரு குறைபாடுமிருக்கிறது மக்களின் பிரதிநிதியாகவிருக்கும் சட்டசபைக்கு அரசாங்கம் பொறுப்பானதல்ல; அரசாங்கமும், சட்டசபையும் ஒன்றையொன்று ஆதரித்து வேலை செய்யும் என்ற உறுதியுமில்லை. இதனால்தான் அங்கு அடிக்கடி நெருக்கடி தோன்றுகிறது. நமது தேசத்து புதிய அரசியல் திட்டத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரண்டு தேசங்களின் அரசியல் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி பலமுள்ள ஒரு தேசிய சர்க்கார் அமைய இடமிருக்கவேண்டும் புதிய அரசியல் திட்டத்தை, அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கும் அங்கத்தினர்கள், இம்மாதிரியான விஷயங்களில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். தேசத்தின் விதியை நிர்ணயிக்கும் பொறுப்பு இவர்களிடமிருப்பதால், தமக்குண்டான கடமையை நேர்மையாகச் செய்வார்கள் என்று நம்பியிருக்கும் மக்கள் நிச்சயம் ஏமாற்றமடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஜனநாயக தேசத்தில் இரண்டு,மூன்று கட்சிகள் இருப்பது எவ்வளவு ஆபத்தோ, அதைவிட ஒரேகட்சியாகஇருப்பது பன்மடங்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடும். ஒரே கட்சி முறையை சமீபத்தில் கூட பெரிய தலைவர்கள் கண்டனம் செய்திருக்கிறார்கள். ஜனாப் ஜின்னா அவர்கள் லீகைத்தவிர வேறு கட்சி பாகிஸ்தானில் இருக்க விரும்பவில்லை. அதனால்தான் கபார்கான் கைது செய்யப்பட்டார் என்ற செய்திகள்தான், ஒரே கட்சி முறையின் விபரீதத்தை உணர்த்துகிறது.

அமெரிக்கமுறையிலுள்ள குறைபாடுகள் இல்லாமலும், இங்கிலாந்திலிருக்கும் பார்லிமெண்டரி முறையில்லாமலுமிருக்கும்படியான புதிய முறைதான் நமக்குத் தேவையானது. பொதுத்தேர்தலில் சட்டசபைக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது போல், மந்திரி சபைக்குண்டானவர்களையும் தேர்ந்தெடுக்கக் கூடும். இம்முறையினால் எவ்வித குறைபாடும் தோன்ற முடியாது. அரசாங்கத்தின் தலைவர் முறை எப்பொழுதும் போலிருக்கலாம். ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அடுத்த தேர்தல் நடந்து சட்டசபை கூடும் வரையில் பதவியிலிருக்கலாம். அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரோ,

அல்லது பெரும்பான்மையோரோ திட்டமான முறையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினாலொழிய, எந்த ஒரு குறிப்பிட்ட திட்டம் அல்லது கொள்கையின்மீது தோல்வியேற்பட்டால் அதற்காக மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டியதில்லை; மேலும் உரிமை கிடையாதென பிரைஸ் கூறுகிறார். மந்திரி சபையிலுள்ளவர்களுக்கு எப்படி கூட்டுப் பொறுப்பு இருக்கின்றதோ அதே போல் மந்திரி சபைக்கும், சட்டசபைக்கும் கூட்டுப்பொறுப்பு இருக்கவேண்டியதவசியம். மந்திரிசபையில் இடைக் காலத்தில் காலியாகும் ஸ்தானங்களை, சட்டசபையே பூர்த்தி செய்துகொள்ளலாம். மந்திரி சபையின் கூட்டங்களுக்கு அரசாங்கத்தின் தலைவர் தலைமை வகிக்கக்கூடாது. மந்திரிசபையின் வேண்டுகோளின்படி அவசர காரணங்களை முன்னிட்டு சட்டசபையைக் கலைக்கவோ, அல்லது கூட்டவோ அதிகாரமிருக்கலாம். ஒரு மந்திரிசபையை ராஜினாமா செய்தால், வேறொரு மந்திரிசபையை தேர்ந்தெடுக்கும்படி தலைவர் சட்டசபையைக் கேட்கலாம்.

சட்டசபைக்கு பொறுப்பானதும், அதனால் பதவியிலிருந்து விலக்கப்படக் கூடியதுமான மந்திரி சபை இருக்குமேயானால், பொறுப்பாட்சியின் சோதனைகளில் நாம் வெற்றியடைந்தவர்களாவோம். மேலும் இப்பொழுதுள்ள பொறுப்பாட்சி முறையில் திட்டமான மாறுதல் ஏற்பட்டே தீரும். நிதியுள்பட எல்லா விஷயங்களிலும், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்ற சட்டசபைக்கு அதிகாரமிருக்கவேண்டும். சட்டசபைதான் ஜனநாயகத்தின் உண்மையான பிரதிநிதியாகும். சட்டசபை எந்த சமயத்திலும், எந்த விதமான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். தற்காலத்தில் சட்டசபையின் கௌரவம் அதிகரிக்காவிட்டாலும், அங்கத்தினர்களுடைய மதிப்பானது ஏதோ ஒரு முறையில் அதிகமாகவேதானிருக்கிறது.

தற்காலத்தில் கூடும் சட்டசபையானது வெறும் கூட்டமாகவேதான் முடிந்துவிடுகிறது. இதிலும் சில நிபந்தனைகளிருக்கின்றன சட்டசபையில் செய்யப்படும் தீர்மானங்கள் யாவும், சிபார்சு செய்யும் முறையில் தானிருக்கவேண்டும் என்பது ஒரு விதி; அடுத்தபடியாக அரசாங்க நிர்வாகத்தில் தாங்க முடியாத குறைபாடுகளிருந்தாலோ, அல்லது மோசமாகவே இருந்தாலும் ஒன்று அதை ஒப்புக்கொள்ள வேண்டும், அல்லது மந்திரி சபையை நீக்கிவிட வேண்டும்; இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் கட்சி முறையானது மந்திரி சபையை நீடிக்கச் செய்ய பலவிதங்களில் முயலுகின்றன. இம்முறையினால் அங்கத்தினர்கள் தங்கள் மனசாட்சியின்படி நடக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. சில விஷயங்களில் மந்திரிசபைக்கு யுக்தானுசார அதிகாரங்களிருப்பதால், சட்டசபையை தன்னிஷ்டப்படி நடக்கச் செய்யும் திறமையுள்ளவர்களாகவும் மந்திரிசபை இருக்கின்றது இவையெல்லாம் ஜனநாயக முறைக்கு விரோதமானவைகள்; வளரும் ஜனநாயத்துக்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடியதாகும். ஜனநாயகத்தில் லட்சிய சிந்தனை என்று கூறப்படும் முறையைத்தான் நாம் விரும்புகிறோம் "மக்களை நம்பும் அரசாங்கமும், அரசாங்கத்தை நம்பும் மக்களும்" என்பதுதான் லட்சிய சிந்தனையாகும். இதையடைந்தால் ஜனநாயகம் தானாகவே வளர ஆரம்பித்துவிடும்.

மிஸ்டர் ஜின்னா உடல் நிலை கவலைக்கிடம்

அடுத்த கவர்னர் ஜெனரல் யார் ?

மிஸ்டர் ஜின்னாவின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகத் தெரிகிறது. அவர் மிகவும் பலஹீனமாயிருக்கிறார். ஒரு பக்கத்திலுள்ள நுரையீரல் வேலை செய்யவில்லை. சுவாசக் குழாய்களில் வேக்காடு அதிகரித்து வருகிறது. நம்பகமான இடங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் சிலவாரங்கள், அதிகமாய் போனால் சில மாதங்கள் தான் பிழைப்பார் என்று கூறுகின்றன. மிஸ்டர் ஜின்னாவுக்கு ஏதாவது ஆபத்து நேருமாயின் (பாகிஸ்தானின் பயங்கர பலாபலன்களை பிரத்தியட்சமாய் பார்ப்பதற்கு ஆண்டவன் அவரை உயிருடன் வைப்பாராக) அவருடைய சகோதரியான பாத்திமா ஜின்னாவை கவர்னர் ஜெனரலாக நியமிக்கும் யோஜனை இருந்து வருவதாக சொல்லப்படுகிறது. இதற்கிடையில் சில வட்டாரங்களில் லியாகத்அலிகான், சௌத்ரீ ஜபருல்லாகான் பெயர்களும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. சௌத்ரீ ஜபருல்லாகான் காதியாணி வகுப்பைச் சேர்ந்தவர். அதனால் இப்பொழுதே முஸ்லிம் பொதுமக்கள் எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றனர். இந்த எதிர்ப்பில் சமீபத்தில் டாக்டர் மேஜர் மஹ்மூத்காதியாணி குத்திக் கொல்லப்பட்டதுடன் அநேக காதியாணிகள் காயமுற்றும் போய்விட்டனர்.

மிஸ்டர் ஜின்னாவுக்குப்பிறகு பாகிஸ்தானில் குழப்பம் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் இருந்து வருகின்றன.

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 13—9—'48 திங்கட்கிழமை { இதழ் 33

இந்தியாவில் அன்னிய காலனிகள்.

சமீபத்தில் இந்தியா பிரான்ஸ் சர்க்கார்களிடையே ஒரு சமரசம் ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலம் இந்தியா, அல்லது பிரான்ஸுடன் சேர முடிவு செய்வதில் பிரெஞ்சிந்திய மக்களுக்குள்ள உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த சமரசத்தின்படி இந்தியாவிலுள்ள பிரெஞ்சு பிரதேசங்களில் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முதலில் பிரெஞ்சுபிரதேசங்களில் முனிசிபல்கவுன்சில் தேர்தல்கள் நடக்கும். புதிதாக அமையும் முனிஸிபல் கவுன்ஸில்கள் உத்தேச பொதுஜன வாக்கெடுப்பு நடத்தும் முறையைதீர்மானிக்கும். இதைக்குறித்து இந்திய பார்லிமெண்டில் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு வெளியிட்ட அறிக்கையில் பிரெஞ்சு தேசங்களில் நடக்கவிருக்கும் முனிஸிபல் தேர்தல்களை மேற்பார்வையிட இந்தியா சார்பில் பார்வையாளர்கள் யாரும் இருக்கமாட்டார்களாயினும் பொதுஜனவாக்கெடுப்பின்போது தேர்தல் சரிவர நடக்கும்படிப் பார்த்துக்கொள்ள பிரெஞ்சு பார்வையாளர்களுடன் இந்திய பார்வையாளர்களும் நியமிக்கப்படவேண்டுமென்று பிரெஞ்சு சர்க்காரிடம் இந்திய சர்க்கார் கோரியிருக்கிறதென்றும் அறிவித்தார். இந்திய சர்க்காரின் கோரிக்கை பாரிஸில் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த நியாயமான கோரிக்கை ஒப்புக்கொள்ளப்படுமென்று நம்ப இடமிருக்கிறது. பிரெஞ்சு இந்தியா இதுவரை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்திருப்பினும் எதிர்காலத்தைப்பற்றி பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் செய்யப்படவிருக்கும் முடிவு இந்தியாவுடன் நெருங்கிய சம்மந்தம் கொண்டிருக்கிறது. எனவே தேர்தல் பாரபட்சமற்ற முறையில் நடக்கவும், எவ்வித குழப்பமுமின்றி தேர்தல் நியாயமான முறையில் நடக்கவும் பார்த்துக்கொள்ள இந்தியாவுக்கு பூரண உரிமையுண்டு. பிரெஞ்சு இந்தியா சம்மந்தப்பட்டவரை பிரச்னை ஒரு மாதிரியாகத் தீர்ந்திருக்கிறது. பொதுஜன வாக்கெடுப்பின் முடிவு எதுவாக இருப்பினும் சம்மந்தப்பட்ட இரண்டு சர்க்கார்களுக்கும் எவ்வித ஆட்சேபனையுமிருக்கமுடியாது. ஆயினும் போர்ச்சுகீஸிய இந்தியாவின் விஷயம் இதுவரை தீரவில்லை. இது சம்மந்தமாக இந்திய சர்க்காரின் பலஹீனமான கொள்கைக்காக வருந்துகிறோம். இந்தியா பொறுத்தவரையில் பல துறைகளிலும் போர்ச்சுகீஸிய இந்தியா அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. போர்ச்சுகல் சர்க்காரின் விரோதமான போக்கால் பிரச்னை மேலும் முக்கியத்துவம் அடைந்துவிட்டது. கோவா, முதலிய இதர இடங்களில் மக்களின் சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்க கையாளப்படும் ஈவிரக்கமற்ற முறைகளுக்கு உதாரணமில்லை அத்துடன் போர்ச்சுகீஸிய அதிகாரிகள் சதா இந்திய யூனியனுக்கு எதிராக சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர் ஹைதராபாத்திடம் அவர்களுக்குள்ள அனுதாபமும் நடைமுறையில் உதவி செய்து வருவதும் அனைவருக்கும் தெரியும். சரியான சந்தர்ப்பத்தில் இப்பிரதேசம் இந்திய யூனியனுக்கு அபாயம் விளைவிக்கவும் கூடும். ஹைதராபாதைவிட போர்ச்சுகீஸிய இந்தியப்பிரச்னை எவ்விதத்திலும் குறைந்ததல்ல. அதிக முக்கியத்துவம் வாய்ந்ததென்றே சொல்லவேண்டும் பேச்சு வார்த்தையின் மூலமோ அல்லது வேறு எவ்வித முறைகளாலோ போர்ச்சுகீஸிய இந்திய பிரதேசத்தை இந்தியா ஆக்ரமித்துக்கொள்வதால் ஒரு அபாயத்தைத் தவிர்க்க முடியும் அத்துடன் நிஜாமுக்கு உதவி கிடைக்கக்கூடிய முக்கிய வழியை மூடிவிடவும் முடியும். ஹைதராபாத்துக்கும் வெளியுலகிலுள்ள அதன் உதவியாளர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை துண்டித்துவிட்டால் ஹைதராபாத் தானாகவே கூட வழிக்கு வந்துவிடலாம். ஆனால் கோவா விஷயம் முற்றிலும் வேறு. கோவா ஒரு துறைமுகம். வெளியிலிருந்து பெருமளவில் யுத்த தளவாடங்களை தருவிக்க அதனால் முடியும். ஆகையால் உடனடியாக இப்பிரச்னையில் கவனம் செலுத்தி இந்திய யூனியன் பாதையில் கிடக்கும் இந்த முள்ளை அகற்றவேண்டியது இந்திய சர்க்காரின் கடமை. ஹைதராபாத் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் கோவா விஷயத்தில் முன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சுதந்திர இந்தியாவும் ஹைதராபாதும்

'இஸ்லாமிய ஆட்சி'யின் பெயரால் வெளி முஸ்லிம்களைத் தூண்டிவிட முயற்சித்து வரும் ஹைதராபாத் பாஸீஸம் சுதந்திர இந்திய சரித்திரத்தில் ஏற்பட்டிருக்கும் புரையோடிய புண்ணாகும். ஆட்சியின் சூத்திரக் கயிர் இன்று நிஜாம் கையிலில்லை. 'இத்திஹாதுல் முஸ்லிமீன்'காரர்களிடம் நிஜாம் ஒரு அரசியல் கைதியாகவே இருக்கிறார். அவருடைய ஆட்சி மேற்படி ஸ்தாபனத்தைச் சேர்ந்த பாஸிஸ்டுகளின் தயவை நாடி நிற்கின்றது. இன்று ஹைதராபாதில் வெறியே அரசியல்; பயங்கரமே ஆட்சி. ஒரு புரம் பாஸிஸ்டுகள் அரசாங்கத்தின் பெரும்பதவிகளை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதுடன் இன்னொரு புரம் போலீஸ் ராணுவ அதிகாரிகளிடையே சுயநலத்தைத் தூண்டிவிட்டு தங்கள் கையில் போட்டுக் கொண்டுமிருக்கின்றனர்.

இந்திய யூனியனுடன் செய்யப்பட்ட முடிவை வெள்ளை எஜமானர்களின் பேச்சைக் கேட்டு நிராகரித்துவிட்டதற்காக பிற்காலத்தில் ஹைதராபாத் பாஸிஸ்டுகள் வருந்தப்போவது நிச்சயம். இந்திய யூனியன் ஹைதராபாத் உள்நாட்டு சுதந்திரத்தில் தலையிட விரும்பவில்லை இன்றைய எல்லைகளே இனியும் எல்லைகளாக இருக்குமென்று இந்தியா உறுதியளித்திருந்தது. அதை நிராகரித்து ஹைதராபாத் அதிகாரவர்க்கம் தனக்கே அழிவைத் தேடிக்கொண்டு விட்டது.

சமஸ்தானத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பில் மராட்டியர், கன்னடியர், ஆந்திரர் வசிக்கின்றனர். எல்லையை ஒட்டியிருக்கும் தங்கள் இனத்துடன் சேர அவர்கள் பல வருஷங்களாக கிளர்ச்சியும் செய்து வருகின்றனர். ஹைதராபாத்திலுள்ள மராட்டிய பிரதேசம் இந்தியாவிலுள்ள மராட்டிய பிரதேசத்துடனும், ஆந்திர பிரதேசம் சென்னை மாகாணத்திலுள்ள ஆந்திர பிரதேசத்துடனும், கன்னடப்பிரதேசம் இந்தியாவிலுள்ள கன்னட ஜில்லாக்களுடனும் இணைக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம். பாஷாவாரி அடிப்படையில் அவர்களுடைய கிளர்ச்சியின் தன்மையை மறுக்கமுடியாது. இன்று சமஸ்தானத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தின் காரணமாக ஹைதராபாத் சர்க்கார் முறிந்தவுடன் மேற்கூறிய மூன்று இனத்தினரும் எல்லையை ஒட்டியுள்ள தங்கள் இனத்தினருடன் ஐக்கியப்பட முயற்சிப்பார்களென்பது திண்ணம். இந்திய யூனியன் தலையிடுவதற்குள் அவர்கள் வெற்றி அடைந்துவிடவும் கூடும். பிறகு ஹைதராபாதின் உள்நாட்டு சுதந்திரம் ஒரு கனவாகவே முடியும் இந்திய யூனியனுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தம் ஒன்றுதான் இவ்வித அபாயத்திலிருந்து ஹைதராபாத்தை காப்பாற்ற முடியும். அம்மாதிரியான அரிய சந்தர்ப்பத்தையும் வெறி பிடித்த ஹைதராபாத் அதிகாரவர்க்கம் இழந்து விட்டது.

ஒரு கோடி ரூபாய் கொடுத்து ஹரிஜனங்களை தங்களுடன் சேர்த்துக் கொண்டதைப் போலவே ஹைதராபாத்திலுள்ள பெரும்பான்மை ஹிந்துக்களையும் செய்துவிட முடியுமென்று நினைப்பது வடிகட்டிய முட்டாள்தனமாகும். அது சாத்தியமாக இருந்திருக்குமானல் இன்று ஹைதராபாத் ஹிந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டு உண்மையாகவே மக்கள் பிரதிநிதிகளின் கைக்கு அதிகாரம் மாற்றப்பட்டிருக்குமானல் ஒரே நாளில் இந்திய யூனியனுடன் சமரஸம் ஏற்பட்டிருக்கவும் முடியும். பாஸிஸ்டு முஸ்லிம்களின் ஒரு சிறிய கூட்டம் ஹைதராபாதில் பாத்தியம் கொண்டாடுவது உலகுக்குத் தெரியாமலில்லை. லஞ்சம் மட்டுமின்றி பலாத்காரத்தையும் உபயோகித்து யதேச்சாதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிப்பதை அறியாதார் யாருமில்லை

சில மாதங்களுக்கு முன் லார்ட்மவுண்ட்பேட்டன் அனுப்பிய அழைப்பை ஏற்று நிஜாம் மட்டும் டில்லிக்கு வந்திருந்தால், அல்லது ஹைதராபாத் டிக்டேடர் அவரை தடுக்காமலிருந்திருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக அது நடக்காமல் போய்விட்டது. இந்தியா ஹைதராபாத் சமரஸத்துக்கு எதிராகவே பாகிஸ்தானிலும் யோஜனைகள் நடந்தன. இந்நிலையில் இந்தியப் பிரதமர் பண்டிதநேரு சென்னையில் சொல்லியதைத் தவிர இந்திய யூனியனுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது ஹைதராபாத் பயங்கர வாதிகளின் முட்டாள் தனத்தால் பலத்தை உபயோகித்து பிரச்னையை தீர்க்க வேண்டிய அவசியம் இந்திய யூனியனுக்கு ஏற்பட்டிருப்பது ஹைதராபாதின் துரதிர்ஷ்டமேயாகும் ஹைதராபாத் அதிகார வர்க்கத்துக்கு நிதான புத்தி இருந்திருந்தால் பிரச்னை சௌஜன்யமான முறையில் தீர்ந்திருக்க முடியும்.

ஹைதராபாத் பிரச்னையில் நாலுகோடி இந்திய முஸ்லிம்கள் மீது பெரும் பொறுப்பு ஏற்படுகின்றது. கடந்த பத்து வருஷங்களாக லீக் தலைவர் சுயநலத்துக்காக முஸ்லிம் பாமர மக்களை ஆயுதமாக உபயோகித்து பலியிட்டார். இன்று காஸிம் ரஸ்வி அதே வழிகளை

யும் முறைகளையும் கையாளுகிறார். சுயநலத்துக்காக மீண்டுமொருமுறை வகுப்புவாத சாபக்கேட்டுக்கு இலக்காக்கி மிஸ்டர் ஜின்னாவைப் போலவே ரஸ்வியும் நாலுகோடி முஸ்லிம்களை பலியிட விரும்புகிறார்.

இந்திய முஸ்லிம்கள் அவருடைய வலையில் அகப்படாமலிருக்கவேண்டும். காரியத்தை சாதித்துக் கொண்ட பிறகு பாகிஸ்தான் லீடர்கள் துரோகம் செய்தனர் இந்திய யூனியனுக்கு விஸ்வாஸமாயிருங்கள் என்று மிஸ்டர் ஜின்னா வெட்கமில்லாமல் சொல்லி மறைந்தார். அவரைப்போலவே காஸிம் ரஸ்வியும் இன்று பிதற்றுகிறார் சமஸ்தானத்திலுள்ள இருபத்திரண்டு லட்சம் முஸ்லிம்களுக்காக நாலு கோடி முஸ்லிம்கள் பலியாக வேண்டுமாம். நாலு கோடி முஸ்லிம்கள் எக்கேடு கெட்டாலும் சரி. இருபத்திரண்டு லட்சம் முஸ்லிம்கள் இருந்தால் தான் டிக்டேடராயிருக்க முடியுமென்பதே அவருடைய எண்ணம்.

அவருடைய குறுகிய மனப்பான்மையையும், சுயநலத்தையும் பார்த்த பிறகு வெத்து வேட்டுகளால் இந்திய முஸல்மான்கள் தூண்டப்பட்டு கண் மூடித்தனமாய் மீண்டுமொருமுறை அழிவுப்படுகுழியில் விழமுடியாது இந்திய முஸல்மான்களின் தலைவிதி இந்திய யூனியனுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. காஸிம் ரஸ்வியுடனல்ல. இத்திஹாதுல் முஸ்லிமீன் உளவாளிகளும் ஏஜெண்டுகளும் விரிக்கும் வலையில் சிக்காமல் இந்திய முஸ்லிம்கள் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். தனிநபர் அல்லது கட்சியின் சுய நல வலையில் சிக்கிவிடக் கூடாது; இன்று விஷயமறிந்த முஸ்லிம்கள் முன்வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பாமர முஸ்லிம்கள் இஸ்லாமின் பெயரால் நடக்கும் பிரசாரத்திற்கு இலக்காகிவிடாமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்றைய நிலைமையில் தலைவர்களின் அசிரத்தையால் ஒன்றுமறியாத முஸ்லிம்கள் விஷமிகளால் ஏமாற்றப்படுவார்களாயின் முஸ்லிம்களின் சமூக வாழ்க்கையே சீர்குலைந்து விடுமென்பதில் சந்தேகமேயில்லை. மீண்டும் அவர்களை சீர்செய்வது பெரும் தலைவர்களாலும் சாத்தியமில்லாமல் போய்விடலாம்.

இந்திய முஸல்மான்களின் வாழ்க்கையில் இரண்டாவது கடவையாக இவ்வித நெருககடியான கட்டம் வந்திருக்கிறது. 1857 ல் நடந்து தோல்வியுற்ற சுதந்திரம் போராட்டத்திற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களை முதல்தர எதிரிகளாக பாவிக்கலாயினர். அந்த நிலைமையிலிருந்து வெளியேற முஸ்லிம்கள் அரும்பாடு படவேண்டியிருந்தது. இன்று ஹைதராபாத் பிரச்னை இரண்டாவது கட்டமாகும். தலைவர்களின் உழைப்பும், சேவையும், வழி காட்டுதலும் இன்று முஸ்லிம்களுக்கு அவசியம் தேவை.

பழிவாங்குவது ஷைத்தானின் வேலை

(சக்கரவர்த்தி ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார்)

கோபிப்பதாலும், பழிவாங்குவதாலும் நமக்கு சந்தோஷம் கிடைக்க முடியாது. கோபித்தும், பழிவாங்கியும் திருப்தியடைய முயற்சிகள் நடந்திருப்பதை கடந்த பன்னிரெண்டு மாதங்களின் சரித்திரம் ஊர்ஜிதம் செய்கின்றது. பழிவாங்குவதால் சந்தோஷம் கிடைக்கக்கூடுமென்றால் இன்று இந்தியா பாகிஸ்தான் இரண்டு நாடுகளிலுமுள்ள மக்கள் மிகவும் சந்தோஷமாயிருந்திருப்பர். ஆனால் நாம் சந்தோஷமாயில்லை. சந்தோஷம் நம்மைவிட்டு வெகு தூரத்திலிருப்பதை நாம் அறிந்தேயிருக்கிறோம். இதைக் கொண்டு நாம் படிப்பினையை கற்றுக்கொள்ள வேண்டும்.

கோபமும், பழிவாங்கும் எண்ணமும் ஷைத்தானின் ஆயுதங்கள். அவைகளின் மூலமே ஷைத்தான் உலகத்தில் தீமைகளை நிலைபெறச்செய்கிறான். அதன் உதவியைக்கொண்டு ஷைத்தான் நம்மை தீர்க்கதரிசிகள், மகாத்மாக்களின் கொள்கைகளுக்கு எதிராக நடக்கும்படிச்செய்து அவர்களுடைய கொள்கைகள் வெற்றிபெற முடியாமல் செய்கிறான்.

நடந்துவிட்ட சம்பவங்களை நாம் மறந்துவிட வேண்டும். இன்றிலிருந்து நாம் மனிதர்களைப்போல் இருக்க ஆண்டவனை பிரார்த்திக்கவேண்டும். ஒருவரையொருவர் சகோதரர்களாக பாவிக்கவேண்டும். ஒவ்வொரு பெண்மணியையும் தாய் அல்லது சகோதரியாகக்கொண்டு ஒவ்வொரு குழந்தையையும் நம்முடைய குழந்தையாக நேசிக்கவேண்டும். ஒருவரையொருவர் வெறுப்பதன் மூலம் நமக்கு வாழ்க்கைப் பொருமையும், நிம்மதியும் கிடைக்கமுடியாது. என்று ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்ய முற்படுவோமோ அன்று மட்டுமே நமக்கு உண்மையான சந்தோஷம் கிட்டும். எங்காவது, ஏதாவது தவறான காரியம் நடந்தால் அதை பிளேக் அல்லது காலரா வியாதியாகவே பாவியுங்கள். அந்த தொத்து நோயிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான முறைகளைப்பற்றி சிந்தியுங்கள்

நிர்வாக விஷயங்களில் நம் நாடு இரண்டு கூறுகளாகப் பிரிந்திருக்கிறது. ஆனால் வியாபார பொருளாதார விஷயங்களில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே எவ்வித சச்சரவுமில்லை. நாம் ஒருவருக்கொருவர் உதவவேண்டும். இரண்டு நாடுகளிலும் வியாபாரத்தையும் வர்த்தகத்தையும் வளர்ச்சியடையச் செய்யவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் உதவினால் உலகத்தில் இருவரின் அந்தஸ்தும் உயரும். நமக்கு மதிப்பும் கௌரவமும் கிடைக்கும்.

கடத்தப்பட்ட பெண்கள்

சுதந்திர தினத்தில் சமூகங்கள் புது வாழ்வு பெறுகின்றன. ஆனால் நமக்கு சுதந்திரம் கிடைத்த நிலைமையும் நம்முடைய போராட்டம் முடிவடைந்த கதையும் நினைக்கும்போதே மயிர்க் கூச்சலெடுக்கின்றது. பல லட்சம் பேரின் படுகொலை; இடம்மாறிய கோடிக்கு மேற்பட்ட மக்களின் அழிவு; இருதரப்பிலும் கடத்தப்பட்ட பல்லாயிரம் பெண்களின் துர்ப்பாக்கிய நிலை நம்முன் காட்சியளிக்கின்றது. சுதந்திரத்துடன் வந்த விளைவுகளின் போக்கு தடைபட்டிருப்பினும் மனக்கசப்பு; துக்கம், வேதனை நம்மை விட்டு நீங்கவில்லை.

ஆசைகள் தீர லாபமடைந்த ஒருசத விகிதத்தினரைத் தவிர அனைவருமே வேதனைப் படுகின்றனர். வெறும் பிரசங்கங்கள் உணர்ச்சிமிக்க கோஷங்கள் பிரயோஜனமற்ற புத்திமதிகளைப்பற்றி அவர்களுக்கு லட்சியமில்லை சுதந்திரத்தின் வானளாவிய உப்பரிகையில் நமக்கும் இடமுண்டா? இல்லையா? என்று கேட்கின்றனர். புரட்சியென்றால் எஜமான மாற்றமென்றுதான் அர்த்தமா? அல்லது பொதுமக்களின் தலைவிதியும் மாறுவதற்கு புரட்சியில் இடமுண்டா? என்று அறிய விரும்புகின்றனர். நம்மிடையே இருக்கும் குறிப்பிட்ட சிலர் அடைந்ததில் நமக்கு ஏன் பங்கு இல்லை? புரட்சியால் நம்முடைய வாழ்க்கையில் மாத்திரம் ரத்தக்கறைகள் ஏன் படிந்திருக்கின்றன என்று வினவுகின்றனர்.

தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவந்த கிராமங்கள், நகரங்களைவிட்டு ஓடிவந்து எழுபது, எண்பது லட்சம் மக்கள் நிழலைத்தேடி அலைகின்றனர். இம்மியும் உணர்ச்சியுள்ள மனிதர்கள் இந்நிலையில் ஆத்திரப்படாமலிருக்க முடியாது. இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் எவ்வித வாழ்க்கை வசதியுமின்றி மக்கள் இடம்மாறிய இச்சம்பவத்துக்கு உவமை யில்லையென்பது உண்மைதான். ஆனால் நிலைமையை சமாளிக்க மேற்கொள்ளப்பட்ட முறைகள் எவ்விதத்திலும் சரியானவை யென்று சொல்லமுடியாது. சீர்திருத்தம் புரட்சியின் லட்சியமல்ல. அடிப்படையில் மாறுதலே லட்சியம் புரட்சியால் நம்தலைவர்கள் சிறப்பாக லாபமடைந்தார்கள். ஆனால் அந்நிய எஜமானர்களைப் போலவே புரட்சியிலிருந்து பொதுமக்களை விலக்கி வைத்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

கிழக்குப்பஞ்சாபிலிருந்து வந்தவர்களின் 100க்கு 85பேர் விவசாயிகள். முஸ்லிமல்லாதார்விட்டுச்சென்ற நிலங்களை நியாயமாக வினியோகித்திருந்தால் பரிவர்த்தனையால் ஏற்பட்ட நிலைமையை ஓரளவு சமாளித்திருக்கலாம். சுயநலவர்க்கம் அப்படி செய்யவில்லை.

எல்லாவற்றையும்விட கடத்தப்பட்ட பெண்களின் பிரச்னை ஆரூத ரணமாகி விட்டது. அதை நினைக்கும் போதே வெட்கித்தலை குனிய வேண்டியிருக்கிறது. இப்பிரச்னை இரண்டு டொமினியன்களுக்கும் பொதுவானது. ஹிந்து, முஸ்லிம் என்ற பாகுபாட்டுடன் இப்பிரச்னையை நாம் அணுகியதில்லை. ஹிந்து, சீக்கிய பெண்மணிகளை கடத்திச்சென்ற இங்குள்ள காலிகளை பன்முறை கண்டித்துள்ளோம் அருவருக்கத்தகுந்த தங்கள் செய்கையால் அவர்கள் இஸ்லாமுக்கு தீங்கு செய்துவிட்டனர். மனிதன் என்ற அடிப்படையிலும், முஸ்லிம் என்ற முறையிலும் அந்நியர்களிடம் சிக்கியிருக்கும் ஏறக்குறைய 60,000 முஸ்லிம் பெண்மணிகளை நினைக்கையில் மனம் வேதனையடைகின்றது. சம்மந்தப்பட்ட மந்திரிகள் விடுத்த அறிக்கைகளுக்குப் பிறகும் அவர்களை மீட்கும் பிரச்னை ஒருவருஷத்திற்கு முன்பு இருந்ததைப் போலவே இன்றைக்கும் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதைக்குறித்து ஒருவருஷமாய் மந்திரிகள் வெளியிட்ட அறிக்கைகளிலுள்ள உருக்கமான வார்த்தைகளின் அளவுகூட பெண்கள் மீட்கப்படவில்லை.

இத்துறையில் ராஜா கஸன்பர் அலிகானையே குறிப்பிடுகிறேன். அவருக்குள்ள பேச்சுத்திறமை நமக்குத்தெரியும். "கடத்தப்பட்ட ஒவ்வொரு பெண்ணையும் மீட்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன." என்ற புழுத்துப்போன அவருடைய வார்த்தைகள் இன்று நாற்றமெடுக்க ஆரம்பித்துவிட்டன.

போகட்டும். ஈரானுக்குப் புறப்பட ஆயத்தம் செய்வதில் அவர் ஈடுபட்டிருக்கிறார். சில தினங்களாக பிரிவு உபசாரங்களை ஏற்கும் வேலையால் அவருக்கு ஓய்வில்லை. இருப்பினும் கடந்த ஒரு வருஷத்தில் கடத்தப்பட்ட பெண்களைக் குறித்து பல மகாநாடுகள் நடந்தன. தீர்மானங்கள் நிறைவேறின. வாரங்கள் கொண்டாடப்பட்டன. எத்தனையோ டின்னர் பார்ட்டிகள் சாப்பிட்டு ஆயிற்று. பத்திரிகைகளில் பிரசாரம் நடந்தது. படங்கள் பிரசுரிக்கப்பட்டன. சேவைகள் பாராட்டப்பட்டன. இங்குமங்கும் மோட்டார்கள் ஓடின. மல் பீஸ்களும் லாயின் கிளாத் பீஸ்களும் வந்தன. அல்லது கொண்டுவரப்பட்டன. ஆனால் 60,000 முஸ்லிம் பெண்களில் இங்கு வந்து சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? 5000 லிருந்து 6,000 வரை! அவற்குச் செலவான பணம் எத்தனையோ லட்சம்! இன்னும் இரண்டு வருஷங்கள் பிடித்தாலும் கடைசி பெண்ணையும் மீட்டிய பிறகே மூச்சுவிடுவதென்று தீர்மானித்திருப்பதாக கஸன்பர்

இந்தியர் பிரச்னை

—(பரதேசி)—

"நான் ஹிந்து" என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளுமளவு ஹிந்து தர்மத்தை அனுஷ்டித்துப், பரிபாலித்து வருகிறவன் நம்மில் நூற்றுக்கு ஒருவன்கூட இல்லை; அதே போல் நான் முஸ்லிம்; குர்ரானைவேதமாகக் கொண்டவன்; அதன் சொற்படி நடக்கிறவன் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவனும இல்லை! என்றாலும் நாம் ஹிந்துவென்றும் முஸ்லிம் என்றும் வெவ்வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறோம்! பரஸ்பரம் பழி சுமத்துவதில் கண்ணுங் கருத்துமாயிருந்துவருகிறோம்.

ஹிந்து முஸ்லிம் பிரச்னை என்று ஒன்றை உண்டாக்கிப் பயங்கரமாக வளர்த்தவர்கள் நாம்தான். செத்து மடிந்தவர்களின் சரித்திர ஏட்டைப் புரட்டி, அவர்களது சுயநலவேட்கைக்கும், அதிகார வெறிக்கும், வரை மீறிய மிருகத் தன்மைக்கும் முறையே, தேசபக்தி, பெருமை, போர்த்திறன் என்ற பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தோம். அவர்கள் வளர்த்த பகைமையை விட்டுக் கொடுக்காமல் — "உன் பாட்டனுக்கு முப்பாட்டன் என் பாட்டனின் எள்ளுப் போனுக்கு தீங்கு நினைத்தான்!.... இந்த பூமியைப் பத்து மாதஞ்சுமந்து பெற்றெடுத்தவள் எங்கள் பாட்டிதான். எனவே நீ இதைவிட்டு எடு ஓட்டம்!..." என்றெல்லாம் அர்த்தமில்லாத முறையில் பகைமை பாராட்டுகிறோம்! பேசும்போது பரஸ்பரம் மனம் விட்டுப் பேசுவதில்லை!... பார்க்கும் போது சந்தேகம் நீங்கிப் பார்ப்பதில்லை..... வேண்டுமென்றே மனக்கசப்பை உண்டு பண்ணி அதற்கு ஹிந்து முஸ்லிம் பிரச்னை என்று பெயரிட்டு அதன் மூலம் பல இன்னல்களுக்கு இலக்காகிறோம்! வேண்டாத மனைவியின் கை பட்டால் குற்றம்; கால் பட்டால் குற்றம் எனும் முறையில் நம்மிடையே பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் மலிந்துவருகின்றன! தினையளவு பெருத விஷயம் மலையளவாக மாறிவருகிறது! இல்லாத எதிரியைக் கற்பனை செய்துகொண்டு அவனை எதிர்க்கத் தொடங்குகினேம்.

கண்ணுக்கெதிரேதான் இப்படியென்றால் கண் மறைவில் கேட்கவேவேண்டாம்! பொருளாதார நிலையையும்தொழிலபிவிருத்தியையும் நோக்கமாககொண்டு வெளிவரும் பெரும்பாலான பத்திரிகைகள் காரசாரமாகத் தலைப்புக்கொடுத்து அறிவின்மையை வளர்த்து அன்பு வாழவேண்டிய இதயத்தில் ஆக்ரோஷத்தை வளர்க்கின்றன! அதிகப்பிரதிகள் விற்பனையாகின்றனவா? என்பதிலேயே அவைகள் கவனம்! அந்தப் பத்திரிகையாசிரியர்கள் நம் எதிரிகளல்ல! நாமேதான் அவர்களும்!

நாம்தான் இப்படியென்றால் நமக்குப் பிரதிநிதிகளாகப் பதவி வகிக்கும் மஹான்களும் உணர்ச்சி வசப்பட்டு அடிக்கடி ஹிந்துமுஸ்லிம் பிரச்சனையைப் பற்றித் திருவாய் மலர்ந்தருளுகிறார்கள்! புதைத்த சவத்தைச் சிரமப்பட்டு தோண்டியெடுத்து மடியில்

அலிகான் வெளியிட்ட அறிக்கை வேடிக்கையாயிருக்கிறது. ஐந்திலிருந்து ஆறாயிரம் பெண்கள் வரை மீட்பதற்கு ஒரு வருஷம் பிடித்தது. இரண்டு வருஷத்தில் பாக்கியுள்ள 54,000 பெண்களை எப்படி மீட்பாரென்பது தெரியவில்லை. இது வெறும் பிரசாரத்தைத் தவிர வேறில்லை. ராஜா கஸன்பர் அலியின் வார்த்தைகளில் த்வனிக்கும் உணர்ச்சியை வரவேற்கிறோம். ஆயினும் கடத்தப்பட்ட பெண்களின் பிரச்னை இரண்டாம் பட்ச பிரச்னையாக்கப்பட்டிருப்பதைக் குறித்து வருந்துகிறோம்.

குர்தாஸ்பூர் ஜில்லாவில் மட்டும் 12,000 கடத்தப்பட்ட முஸ்லிம் பெண்மணிகள் இருக்கின்றனர். ஒரு வருஷத்தில் 1200 பேர் மட்டுமே அங்கிருந்து மீட்கப்பட்டனர். பாக்கியுள்ளவர்களை மீட்க இன்னும் 12 வருஷங்களாவது பிடிக்கும். அதுவரை அவர்கள் கிழவிகளாகிவிடலாம். ஆகையால் இப்பிரச்னையை கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

'ஆஸாத்' லாஹூர்

இதுவரை இந்திய சர்க்கார் ஏறக்குறைய பதினாயிரம் பெண்களை மீட்டி பாகிஸ்தானுக்கு அனுப்பியிருக்கின்றனர். அதற்கு மாறாக பாகிஸ்தானிலிருந்து மீட்கப்பட்டு இந்தியா வந்து சேர்ந்த பெண்மணிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரமேயாகும். நேரு சர்க்காரைப் போலவே ஜின்னா சர்க்காரும் அந்தரங்கசுத்தியுடன் மீட்சி வேலையில் ஒத்துழைத்திருந்தால் பாகிஸ்தான் பத்திரிகைகள் கடத்தப்பட்ட பெண்களைக் குறித்து முதலைக் கண்ணீர் வடிக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. பெண்கள் கற்பிழந்தாலென்ன? மக்கள் கொல்லப்பட்டாலென்ன? மனித ஒழுக்கம் பொசுக்கப்பட்டாலென்ன? ஜின்னா கோஷ்டியார் அதிகார பீடங்கள் ஆடம்பரமாய் அலங்கரிப்பது ஒன்றே முஸ்லிம்களின் மனம் குளிரப் போதாதா?

மிஸ்டர் ஜின்னா காலமானார்!

● ● ●

ஹிஜ்ரி - 1367 துல்கஃதாமீ 8உ ஞாயிற்றுக் கிழமை (11—9—48 சனிக்கிழமை) இரவு 10-25க்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் காய்தே ஆஜம் மஹம்மது அலி ஜின்னா காலமானார். கிருஸ்மஸ் நாளில் பிறந்தார். கராச்சியில் ஆரம்பக் கல்வி பயின்ற பின்னர் பாரிஸ்டர் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். பாரிஸ்டர் பட்டம் பெற்று பம்பாயில் வக்கீல் தொழில் நடத்தி பிரக்யாதி பெற்றார். காங்கிரஸ் கொள்கை 'பிரிட்டிஷாருக்கு உட்பட்ட சுதந்திரம்' என்று இருந்தவரையில் காங்கிரஸோடு ஒத்துழைத்தார். 'பூரண சுதந்திரம்' என்று காங்கிரஸ் தன் கொள்கையை திருத்தி யமைத்தவுடன் காங்கிரஸிலிருந்து விலகினார். லாயிட் ஜார்ஜ், மிண்டோ, அட்லண்ட் காலூன் டியூடர் பெக், மாரிஸன், ஆர்ச்பால்ட் குறிப்பாக மிண்டர் லௌடன் முதலியவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட பாகிஸ்தான் திட்டத்தை நிறைவேற்றினார். சர்ச்சிலைப் போன்ற பிற்போக்காளர்களுடைய ஆதரவில் அது அமுலுக்கு வந்தது. பாகிஸ்தானும் அடைந்தார்.

ஒரு மனிதன் மறைந்த பிறகு இஸ்லாத்தின் சட்டப்படி அவனுடைய கீர்த்தியைத்தான் மக்களுக்கு எடுத்துரைத்து நல்வழி காட்டவேண்டும்.

எனவே அவருடைய வாழ்வின் ஒரே லட்சியமான பாகிஸ்தான் விளைவுகளிலிருந்து பொதுவாக இந்தியர்களை குறிப்பாக முஸ்லிம்களை காப்பாற்றவும், அவருடைய குற்றங்களை தன்னுடைய கருணையால் மன்னித்து அவருடைய ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

நன்றி

"ஆஸாத்" அன்பர்கள் அநேகர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக ஹைதராபாத் சம்பந்தமாக எழுதப்படும் கட்டுரைகளை பலர் புகழ்ந்திருக்கின்றனர். ஆகஸ்டு 16-ந் தேதி அரசியல், நிர்ணயசபை மெம்பர் ஸ்ரீ V. நாடிமுத்து பிள்ளை அவர்கள் "ஆஸாத்" ஒரு முக்கிய பிரசார பத்திரிகை அதில் வரும் கட்டுரைகள் மனதை கவருகின்றன. முஸ்லிம்களிடையே ஏற்பட்டு வரும் மாறுதலிலிருந்து "ஆஸாத்" செய்து வரும் சேவை நன்கு புலனாகின்றது. அதை பலமடையச் செய்வதில் எனக்கு ஆர்வமுண்டு" என்று ஆதரித்தார். ஆஸாதை ஆதரித்து அனுப்பியிருக்கும் அன்பர்களுக்கு தனித்தனியே நன்றி செலுத்த இயலவில்லையாதலால் இதன் மூலம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

வைத்துக்கொண்டு பிலாக்கணம் பாடுகிறார்கள்! இதனாலெல்லாம் நம் பிரச்னை மிகவும் நெருக்கடியாகி விடுகிறது! மறக்கவேண்டிய துர்ப்பாக்ய சம்பவங்களை யெல்லாம் மறக்க முடியாமல் போய்விடுகிறது! மரணப் படுக்கையிலிருக்கும் பகைமையுணர்ச்சி புத்துயிர் பெற்றெழுகிறது!

இதெல்லாம் நம் அறிவீனம்! பொறுமையின்மை பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில்லாமல் மனிதத்தன்மையை ஒழித்து மிருகத்தன்மையை வரவழைக்கும் மகாபாதகம்! இன்றைய பிரச்னைகளுக்கு நாமேதான் காரணம்! இந்தப் பிரச்னைகளுக்கு முடிவு கட்ட வேண்டியவர்களும் நாமேதான்!

நாம் என்றால் இந்த பாரத பூமியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் (ஹிந்துக்கள் - முஸ்லிம்கள், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்-திராவிடக்கட்சியார், திராவிடக்கட்சி எதிர்ப்பாளர்-ஹிந்தியை எதிர்ப்பவர் - ஆதரிப்பவர்......... தமிழர், ஆந்திரர், கன்னடியர் முதலிய) எல்லோரும்தான்!

எனவே, இனிமேல் ஹிந்து - முஸ்லிம் என்ற பெயரை விட்டொழித்து - இந்தியர் என்று சொல்லிக் கொள்வோம்! பழைய சரித்திரக் கண்கொண்டுபார்க்கும் பேதமையை விடுத்து நேருக்கு நேர் நின்று பார்த்து ஒருவருக் கொருவர் மனம் விட்டுப் பழகுவோம்!

ஹிந்து முஸ்லிம் பிரச்னையைப்பற்றி மணிக்கணக்காகப் பேசுவதையும், பக்கம் பக்கமாக எழுதுவதையும் விட்டொழித்து உண்மையிலேயே இந்தியரின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம்.!

நடைமுறையில் பலவிதக் கலாசாரமுடைய நம் மக்களிடையே நல்லெண்ணம் நிலைபெற வழி தேடுவோம்! பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பழிசுமத்தும் வேலையைவிடுத்து நடந்த தவறுகளை மறந்து சமாதானமாக ஒற்றுமையுடன் உயிர் வாழ்வோம்! அன்பின் உருவாம் அண்ணல் காந்தி மஹான் கனவுகண்ட புதிய பாரத சமுதாயத்தை அமைப்போம்.

அழிவை நோக்கி பாகிஸ்தான்.

பிரிவினையுடன் மூண்ட கலவரங்களால் கிழக்கு பஞ்சாப், டில்லி, ஐக்கியமாகாணம்முதலிய இடங்களிலிருந்து முஸ்லிம் அகதிகள் வந்து குவிய ஆரம்பித்தனர். லாஹூரில் கண்டவிடமெல்லாம் கறி, பராட்டா கடைகள் கண்ணுக்குப் பட்டன. தினம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில் கால் நடைகள் அறுபட்டன. விவசாயத்துக்கு கால்நடைகளின் அவசியத்தை அன்று குருமா சாப்பிட்டவர்கள் உணரவில்லை. இன்று லாஹூரில் நெய் குதிரைக்கொம்பாகி விட்டது. எட்டு ரூபாய் கொடுத்தாலும் ஒருசேர் நெய் கிடைப்பதில்லை இருந்தாலும் பாகிஸ்தானிகளுக்கு எதிர்காலத்தைப் பற்றிய கவலையில்லை.

ஹிந்து, சீக்கியர்கள் விட்டுவந்த சொத்தில் ஒரு பாகம் பணக்காரர்கள், சட்டசபை மெம்பர்கள், அதிகாரிகள், மந்திரிகளின் பங்களாக்களில் போய்ச்சேர்ந்தது. மீதியை குண்டர்கள் ஆக்ரமித்துக்கொண்டனர். முஸ்லிம் பொது ஜனங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பொருளாதார முறிவு ஏற்பட்டு புரட்சி ஆரம்பமானால் ஓடிப்போய் நிம்மதியாயிருக்கலாமென்ற நோக்கத்துடன் பெரிய மனிதர்கள் எல்லாவற்றையும் ரொக்கமாக்கி இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களுக்கு அனுப்பிவிட்டனர். குண்டர்கள் கைப்பற்றியதும் கிட்டத்தட்ட தீர்ந்துவருகிறது.

அகதிகள் படும்பாட்டை வர்ணிக்க முடியாது. பஞ்சாப் அகதிகள் டில்லியிலிருப்பதை டில்லிவாசிகள் விரும்பாமலிருப்பதைப் போலவே ஐக்கிய மாகாணம், டில்லியிலிருந்துவந்த அகதிகளை பஞ்சாபிகளும், சிந்திகளும் விரும்பவில்லை, அமிர்தசரஸ், கிழக்கு பஞ்சாப் அகதிகளைக்கூட லாஹூர் வாசிகள் வெறுக்கின்றனர். அதன் பயனாக பல லட்சம் அகதிகள் முகாமில் கிடந்து வாடுகின்றனர். அவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்பு தட்டிவிட்டது. அதிகாரிகளுக்கும் அவர்களுக்குமிடையே சச்சரவு நடக்காத நாளே கிடையாது.

பண்டங்களை வாங்க பாகிஸ்தானிகள் கையில் பணமில்லை. கடைக்காரர்கள் வியாபாரமில்லாமல் ஈக்களை ஓட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றனர். பொதுவாக மக்களிடையே அமைதியின்மை பரவிவிட்டது. மக்கள் மனமுடைந்துவிட்டனர். சில தினங்களுக்குமுன் சில முஸ்லிம்கள் காங்க்டா, ஹீஷ்யார்பூரிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் திருப்பிச்செல்ல அனுமதி கோரினர். கிழக்கு பஞ்சாபில் ஒரு முஸ்லிம் கூட இல்லையென்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது "மேற்கு பஞ்சாபில் சுதந்திரமாய் வாழ்வதைவிட கிழக்கு பஞ்சாப் ஹிந்து சீக்கியர்களுக்கு அடிமைகளாக இருப்பதையும் அல்லது அவர்கள் கையால் இறப்பதையும் வரவேற்கிறோம்" என்று அவர்கள் பதிலளித்தார்கள். இதைக் கொண்டு பாகிஸ்தான் எதிர்காலம் என்னவாக இருக்குமென்று யூகிப்பது சிரமமல்ல.

ராஜாஜியின் பெருமை

சக்கரவர்த்தி ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார் 1945ல் பெங்களூருக்கு விஜயம் செய்தபோது என் வீட்டில் நான்கு தினங்கள் தங்கியிருந்தார். என்னிடமும், என் குடும்பத்தாரிடமும் அவர்காட்டிய அன்பால் உலகப் பெரியார் உத்தமர் மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக நம் உள்ளங்களில் இடம் பெற்றார். அவரைப் போற்றி புகழாத நகரில்லை. மூன்று வருஷங்களுக்கு பிறகு மேன்மை தங்கிய சக்கரவர்த்தி ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக மறுபடியும் பங்களூர் வந்தார். அவரை சந்திக்க நான் அஞ்சினேன். சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்குமோ இல்லையோ! அப்படித்தான் சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட போதிலும் நம்முடன் சகஜமாக பேசுவாரோ இல்லையோ என்றெல்லாம் என் மனம் சஞ்சலப்பட்டது. எனவே அவர் விஜயம் செய்த பல இடங்களுக்குச் சென்று எட்ட இருந்து தரிசித்தோம்.

நண்பர் பழனிவேல் முதலிய மற்றும் சில நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் மாலை மூன்று மணிக்கு என் குடும்பத்தினரும் நண்பர்களுமாக சேர்ந்து சென்றோம். இந்தியாவின் கவர்னர்ஜெனரல் நம் அன்புக்கு பாத்திரமான ராஜாஜியாக நம்முடன் பேசாவிட்டால் நம் மனம் வேதனையடையும் என்று நண்பர் பழனிவேலிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ராஜாஜியிடமிருந்து அழைப்பு வந்தது நாங்கள் உள்ளே சென்றோம். எங்களைக்கண்டதும் சிரித்துக்கொண்டே நம் ராஜாஜி எங்களிடம் நேராக வந்தார். அதே அன்பு, அதே வாஞ்சை, ஆனால் முன்பிருந்ததைவிட ஆயிரம் மடங்கு அதிசம் வித்தியாசம் அவ்வளவுதான் அவர் பேசிக் கொண்டிருக்கையில் என்னுடைய அகக்கண்முன் குசேலனிடம் கிருஷ்ணன் பேசுவதைப்போன்ற ஒரு காட்சி தோன்றிற்று. நம் அருமை ராஜாஜியைப் பற்றி தவறான எண்ணம் கொண்டிருந்ததற்காக நான் வருந்தினேன். ஆண்டவனிடம் மன்னிப்பு கேட்டேன். நோயற்ற வாழ்வும் குறையற்ற கீர்த்தியும் நம் ராஜாஜிக்கு தந்தருளும்படி இறைவனை வேண்டிக்கொண்டே விடைபெற்று திரும்பினோம்

— வாழ்க ராஜாஜி!

V. ராமானுஜலு நாயுடு,
தலைவர்,
கஸ்தூரிபாய் வாசகசாலை.

ஹிந்தி எதிர்ப்பை கைவிடுக !

[நாகை V. E. M. ஹமீது யூசுபுவத்தனி]

நம் தமிழ் நாட்டில் சென்னை சர்க்கார் ஹிந்தியை தேசீய மொழியாகக்கொண்டு வந்திருப்பதை ஆட்சேபித்துச் சிலர் தீவிரக்கிளர்ச்சி செய்யப்போவதாகச் சொல்லி கிளர்ச்சி செய்யவும் ஆரம்பித்துள்ளனர். இது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். நாம் தமிழகத்தில் இருந்தாலும், நமது தாய்மொழி தமிழ் மொழியாக இருந்தாலும், நம் தமிழகத்தில் மட்டுமே அது பேசுவதற்கோ, எழுதுவதற்கோ மட்டும்பிரயோஜனப்படும். சுமார் 32-கோடி மக்கள் உள்ள இந்திய யூனியனில் ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு மொழி பேசப்படுகையில், தமிழ்மொழி ஒன்றை மாத்திரம் ஒருவன் படித்திருந்தால் நம் இந்திய யூனியனிலுள்ள மற்ற மாகாணத்தவரோடு எவ்வித உறவு வைத்துக் கொள்ள முடியும் ? ஒரு பொது மொழியிருந்தால் தான் அரசாங்க விஷயத்திற்குப் பேருதவியாக இருக்கும். அதனால் தான் நமது மாகாண சர்க்கார் ஹிந்தியை இரண்டாவது மொழியாக வைத்துள்ளனர். இதனால் தமிழுக்கு ஆபத்தோ, தீங்கோ ஏற்பட்டுவிடப் போவதில்லை. தமிழ் மொழியை சர்க்கார் உதாசீனம் செய்யவில்லை அரசாங்க மொழியைக்கூட தமிழ் நாட்டில் தமிழை வைக்கப்போவதற்கறிகுறியாகப் பிரதேச மொழிகளிலேயே அரசாங்க விஷயங்களெல்லாம் நடத்தவேண்டுமென்று அவர்கள் உத்திரவிட்டுள்ளனர். நம் மாணவர்களுக்குக் கூட தமிழ் மொழியைத் (தாய் மொழி) தான் பிரதான மொழியாகவும் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழர்களாகிய நாம் வீண் குதர்க்கங்கள் செய்துகொண்டு போவோமானால் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும்பொழுது (இது நிச்சயம்) இந்திய யூனியனின் ஒரு அங்கமாகவே இருக்கப்போகிற நாம் அரசியல் பொருளாதாரத் துறைகளில் மிகவும் பாதிக்கப்படுவோம்' இன்று எடுத்துக்கொண்டால் டில்லி அரசாங்க மாளிகையில் நம் தமிழ்நாட்டவரே அதிகமாக இருக்கிறார்கள். நாம் ஹிந்தியை எதிர்த்தால் வருங்காலத்தில் இந்நிலை மாறிவிடும். அலிகார் சர்வகலாசாலை ஸ்தாபகர் காலஞ்சென்ற ஸர் செய்யத் அஹமதுகான் காலத்தில் ' முஸ்லிம்கள் ஆங்கிலம் கற்பது கூடாது. அது ஹறாம்'' என்று ஒரு கூட்டத்தார் செய்த பிரசங்கத்தின் விளைவாக முஸ்லிம்கள் அரசியல் பிற்போக்கடைந்து பிரதான பதவிகளிலே இல்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. மற்ற மதத்தினர்களோ ஆங்கிலத்தை கற்று அரசாங்கத்தில் பெரிய பதவிகளை அடைந்தனர். அம் மௌடீகத்தை பொருட்படுத்தாமல் கடுமையான எதிர்ப்பினிடையே ஸர் செய்யத் அஞ்சாமல் ஆங்கிலத்தை முஸ்லிம்கள் அவசியம் கற்கவேண்டுமென்று வகைசெய்யாமலிருப்பின் இன்றைய முஸ்லிம்களின் நிலை எவ்விதமிருக்கும் ? இன்னும் மோசமான படு பாதாளத்திலேயே வெள்ளையனின் அரசாங்கத்தில் தள்ளப்பட்டிருப்பர். ஆனால் இன்று நம் நாடு சுதந்திரமடைந்துவிட்டது இந்திய அரசியல் விஷயத்தில் ஆங்கிலம் தேவையில்லையென்றாலும், உலக விஷயங்களுக்கு ஆங்கிலம் அவசியமாகவே இருக்கிறது. அதனால்தான் இன்றும் ஸர் செய்யதை நாம் பாராட்ட வேண்டியிருக்கிறது. முஸ்லிம்களை முன்னுக்கு கொண்டுவந்து அரசாங்க விஷயங்களில் பிரதான பங்கெடுக்குமாறு செய்த பெருமை அவரையே சாரும் !

நம் நாட்டில் ஒரு பொது மொழி வேண்டுமென்றால் அது பெரும்பான்மையான மக்கள் பேசக்கூடியதாயும் எளிதாக உள்ளதாயும் இருக்க வேண்டும். அவ்விதமுள்ளது அதாவது $22\frac{3}{4}$-கோடி மக்கள் வரை பேசக்கூடியதும், இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியதும் ஹிந்தியேயாகும் அதனால்தான் அரசாங்கம் ஹிந்தியை பொதுமொழியாக்கியுள்ளது. ''தாய்மொழி மூலமே தான் மாணவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கப்படவேண்டும் ' என்று இந்திய கல்விமந்திரி மௌலானா ஆஸாத் ஐக்கிய மாகாண சர்க்காரின் பாரசீக, அரபு மொழிக் கமிட்டியின் கூட்டத்தில் வற்புறுத்திப் பேசியிருப்பதே தாய்மொழிக்குப் பங்கம் வந்துவிடும் என்று தொடை நடுங்கிக்கொண்டிருப்போருக்கு ஆறுதலாகும்.

ஆகவே தமிழர்களாகிய நாம், தமிழ் நாட்டில் துவங்கியுள்ள அர்த்தமற்ற ஹிந்தி எதிர்ப்புக்கூச்சலைக் கைவிட்டு எதிர்காலத்தின் அரசியல் துறையில் முற்போக்கடைய பொதுமொழியாகிய ஹிந்தியை அவசியம் கற்றுக்கொள்ள முனைவோமாக !

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தேசீய மொழி !

ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும்
அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட
சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம்
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது
உங்கள் தேசீயக் கடமை.

மானேஜர், ஆஸாத். குடந்தை.

பாகிஸ்தான் பத்திரிகைகள்.

பாகிஸ்தானில் பெண்கள் விற்பனை.

பலூஜிஸ்தான், எல்லைப்புரம், டேராகாஜிகான் மலை ஜாதிப் பிரதேசங்களில் இன்னும் பெண்களை விலைக்கு விற்கும் வழக்கம் நீடித்து இருந்துவருகிறது. அதற்கு சட்ட பூர்வமாக அத்தாட்சிகள் வழங்கப்படுகின்றன. சுருங்கச்சொல்லின் சோர விற்பனை சட்ட பூர்வமான அந்தஸ்தை பெற்றிருக்கிறது. ஆங்கில ஆட்சியில் அரசியல் நோக்கங்களுக்காக சகிக்கமுடியாத இந்த அக்கிரமம் தடை செய்யப்படாமலிருந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகும் பெண்கள் விற்பனை நடப்பது வியப்புமட்டுமின்றி வெட்கக்கேடுமாகும்.

அவ்வப்போது ஏற்படும் அவசியத்தையொட்டி ஸ்பெஷல் அதிகாரத்தை பிரயோகித்து பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் அவசரச் சட்டங்களை பிறப்பிக்கிறார். ஆனால் இந்த பயங்கர அக்கிரமத்தை எதிர்த்து பல மாதங்களாக பெண்கள் கண்டனக்குரல் எழுப்புகின்றனர். அதைக் கேட்பாரில்லை. இப்பிரச்னையில் சர்க்காரின்கவனத்தை திருப்புவதற்காக 'கர்ல்ஸ்ஸிவில் லிபர்ட்டி டிபெண்டிங் சொஸைடி (Girls civil liberty Depending Society) என்ற பெயரால் பலூஜிஸ்தானில் ஒரு சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சங்க சார்பில் ஆங்காங்கே பெண்களின் கூட்டங்களும் நடக்கின்றன. இதில் 1901-வருஷத்திய எல்லைப்புர ரெகுலேஷன் 3-வது விதியை ரத்து செய்யும்படி கோரப்படுகிறது. ஆங்கில ஆட்சியின் பழைய முறைகளாலும் அநியாயமான சட்டங்களாலும் பாதிக்கப்பட்ட மக்கள் அவைகளை ரத்துசெய்யும்படி சர்க்காரின் கவனத்துக்கு கொண்டுவரவேண்டிய அவசியம் பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு இருக்கின்றதா என்பதுதான் பிரச்னை. இன்று அதிகாரத்திலிருப்பவர்களும் ஆங்கிலேயர்களைப் போல் அந்நிய நாட்டினரா? நாட்டின் அவசியமும் மக்களின் குறைகளும் தெரியாதவர்கள் தானா? ('கௌஸர்')

பாகிஸ்தான் முஸ்லிம் அகதிகள் அவதி

அபாயகரமான பரிவர்த்தனை அனுஷ்டானத்திற்கு வந்தபோது பொறுப்பு வாய்ந்த நம் தலைவர்கள் காரியாம்சத்தில் சோடைகள் என்று முதல் தடவையாக நமக்குத்தெரிந்தது. நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு காகிதங்களைபிரட்டுவது சுலபம்தான். ஆனால் அதன் விளைவுகளை உணர்வது சிரமம். பிரிவினை பற்றிய இறுதி முடிவு செய்யப்படுவதற்கு முன்பே விஷயமறிந்த ஹிந்து, சீக்கியர்கள் கிழக்கு பஞ்சாப் டில்லி, ஹரித்துவார் முதலிய இடங்களுக்குப் போக ஆரம்பித்து விட்டனர். லாஹூர் ஸ்டேஷனில் குவிந்திருந்த ஹிந்து, சீக்கிய பிரயாணிகளின் நெரிசலால் ரயில் பிரயாணமே அசாத்தியமாயிருந்தது.

அப்பொழுது கிழக்கு பஞ்சாப் சட்டசபை மெம்பரான சௌத்ரி முஹம்மது ஹஸன் "குறைந்த பட்சம் அம்பாலா உள்பட டில்லி வரை பாகிஸ்தான் ஏற்படப்போவது நிச்சயம்." என்று அறிக்கைகள் விட்டுக்கொண்டிருந்தார். சில தினங்களுக்குப் பிறகு "அம்பாலா விஷயம்தான் சந்தேகம் ஆனால் லூதியானா உள்பட ஜகாதரி நம் இறுதி எல்லையாக இருக்குமென்பது நிச்சயம்" என்று அறிக்கைகள் விடுத்தார். பஞ்சாப் இரண்டு கூறுகளாகப் பிரியவிருந்ததை சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டிவந்தன.

எப்படியோ நடக்கவிருந்தது நடந்துவிட்டது. ஆனால் நம் தலைவர்கள் தங்கள் போக்கால் தாங்கள் தகுதியற்றவர்களென்பதை நிரூபித்து விட்டனர். ஹிந்து, சீக்கியர்கள் முன் ஜாக்கிரதையுடன் முன்கூட்டியே பாகிஸ்தான் பிரதேசத்திலிருந்து வெளியேறி விட்டனர். ஒரு சில இடங்களில்தான் அவர்கள் வெளியேறாமல் இருந்தார்கள்.

முஸ்லிம்களோ கடைசி மூச்சுவரை பொறுப்பை கொஞ்சமேனும் உணர்ந்து தக்க சமயத்தில் சரியான ஆலோசனை கூறுவார்கள் என்றநம்பிக்கையில் தலைவர்களின் முகத்தை அண்ணாந்து பார்த்தவண்ணம் பேசாமலிருந்தனர். பரிவர்த்தனை கட்டாயமாய் அமுலுக்கு வந்தபோது கிழக்கு பஞ்சாப் முஸ்லிம் எம் எல் ஏ-க்கள் முஸ்லிம் பொது மக்களை நிராதரவாய் விட்டுவிட்டு லாஹூருக்கு ஓடி வந்துவிட்டனர். முஸ்லிம்கள் கொலையுண்டு அடிபட்டு பெருங் கஷ்டங்களுக்குள்ளாகி அழிவுற்ற பிறகு மிஞ்சியவர்கள் லாஹூர் வால்டர் அகதி முகாமுக்கு வந்து சேர்ந்தனர். அன்று அவர்களை வெகு சுலபமாக ஜில்லா வாரியாக குடியேற்றி யிருக்கமுடியும் அனுபவமற்றிருந்த அரசாங்கம் திடீரென்று ஏற்பட்ட பொறுப்பால் நிதானமுமிழந்தது. ஆனால் இன்று அகதிகளின் பிரதிநிதிகளாக இருக்கும் இந்த எம். எல். ஏ-க்கள் அன்று எங்கிருந்தனர்? மந்திரிகளின் பங்களாக்கள் அல்லது அலாட்மெண்ட் அதிகாரிகளின் ஆபீஸ்களில்! அகதிகளை ஜில்லாவாரியாக குடியேற்றும் கவலை அவர்களுக்கு இருக்கவில்லை. பங்களாக்கள், தொழிற்சாலைகள், நிலங்களை ஆக்ரமிப்பதில் முனைந்தனர். அது முடிந்ததும் தேர்தல் நினைவுவந்தது. பதவி மோகம் வாட்ட ஆரம்பித்தது. அப்பொழுது அவர்கள் அகதி முகாம்களில்

கவனத்தை செலுத்த ஆரம்பித்தனர். தேர்தல் ஏஜண்டுகளையும் ஓட்டர்களின் கண்டிராக்டர்களையும் செல்வாக்குள்ளவர்களையும், தேட ஆரம்பித்தனர் பேசத் தெரிந்த சிலர் தங்கள் காரியத்தை சாதித்துக்கொண்டு பல்வேறு இடங்களில் நிலங்களை ஆக்ரமித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டனர், ஆனால் பெரும்பான்மையினர் அகதி முகாம்களில் கிடந்து வாடுகின்றனர்

இன்று அகதிகள் ஜில்லாவாரி குடியேற்றத்தை கோருவது முற்றிலும் நியாயம் அதனால் அவர்களுடைய கஷ்டங்கள் நீங்கி துன்பங்கள் அகல முடியும் அவதிப்படும் அகதிகள் ஆத்திரங்கொள்வதில் ஆச்சரியமில்லை. வாழ்க்கையில் வெறுப்படைந்து எதிர்காலம் அந்தகாரத்திலிருப்பதை பார்ப்பவர்கள் எவ்வளவு தான் பொறுமையுடனிருக்க முடியும்! அவர்களும் மனிதர்கள் தானே!

அதிகாரிகள் அகதிகளின் உணர்ச்சிகளை அறியவில்லை. அவர்கள் சொத்திழந்தனர். கால்நடைகள் பறிபோயின. மானம் பறிக்கப்பட்டது. உயிரைமட்டும் காப்பாற்றிக்கொண்டு பாகிஸ்தான் வந்தனர். இங்கு அதிகாரிகள் அவர்களை ஆதரிப்பதில்லை. ஆறுதல் கூறுவதில்லை. இங்குள்ளவர்களும் அவர்களை அந்நியர்களாக பாவித்து ஏளனம் செய்கின்றனர். "..வகை கெட்டவர்களே! உங்களை இங்கு அழைத்தவர்கள் யார்? நாசமாய் போனவர்கள் எங்கிருந்து வந்து தொலைந்தனர்?" என்று இழித்துப் பேசுகின்றனர்.

அகதித் தலைவர்களுக்கோ தேர்தலே குறிக்கோள். பதவியே பிரதானம் ஓட்டர்கள் ஒரு இடத்திலில்லாமல் ஜில்லா வாரியாக குடியேற்றப்பட்டு சிதறிவிட்டால் தேர்தலில் வெற்றிபெற முடியாதென்பது அவர்களுடைய எண்ணம்..................

'ஆஸாத்' லாஹூர்.

பாகிஸ்தானில் முஸ்லிம் அகதிகள் படுகொலை!

22 பேர் இறந்தனர். 80 பேர் காணவில்லை. 150 பேர் காயமுற்றனர்.

மாண்ட்கோமரி துப்பாக்கிப் பிரயோகம்.

லாகூர், ஆக. 28—

மாண்ட் கோமரி போலீஸார் செய்த துப்பாக்கி பிரயோகத்தை விஜாரிக்க அகதி தலைவர்களின் அசெம்பிளி நியமித்த விஜாரணை கமிட்டி வெளியிட்டிருக்கும் அறிக்கை 22 பேர் இறந்தனர்; 80 பேர் காணவில்லை; 150 பேர் காயமுற்றனர் என்று கூறுகிறது...... கமிட்டி அங்கத்தினர்கள் தலைவர் முஹம்மது ஹஸனிடம் ரிபோர்டை சமர்ப்பித்தனர். "அகதிகள் மீது போலீஸார் செய்த துப்பாக்கிப் பிரயோகம் அனாவசியமானது. அதைத் தவிர்த்திருக்க முடியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட அகதிகள் நிராயுதபாணிகளாக இருந்தனர். பலாத்காரத்தை உபயோகித்து தங்கள் தலைவர் ராவ்குர்ஷீத் அலியை விடுவிக்க அவர்கள் விரும்பவில்லை. ஆட்சேபகரமான கோஷங்களையும் அவர்கள் கோஷிக்கவில்லை. அவர்கள் அமைதியாகவே இருந்தனர்" என்று முஹம்மது ஹஸன் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

விஜாரணைக் கமிட்டி ரிப்போர்ட்

இறந்தவர்களில் 17 பேரை அகதிகள் அடக்கம் செய்தனர். ஐவரை எவ்வித சடங்குமின்றி போலீஸாரே அடக்கம் செய்துவிட்டனர். காணாத எண்பது பேருக்கும் அதே கதி நேர்ந்திருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது. பிரதேச அதிகாரிகள் முன்கூட்டிப் போட்டிருந்த திட்டப்படியே தாக்கினர் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அகதிகளை தங்கள் வலையில் சிக்க வைப்பதற்கு ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அகதிகள்மீது சாட்டப்படும் குற்றங்கள் ஆதாரமற்றவை. ஜில்லாவாரியாக தங்களை குடியேற்ற வேண்டுமென்று கோரிய தங்கள் தலைவர் கைது செய்யப்பட்டதை கண்டித்து தங்களுடையகோரிக்கையின் நியாயமான தன்மையை அதிகாரிகளுக்கு உணர்த்தவே அவர்கள் கூடினர். அகதிகள் போலீஸ் ஸ்டேஷனை தாக்க எண்ணியிருந்தால் ஸ்டேஷனுக்கு கால் மைல் தூரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்க முடியாது. துப்பாக்கிப் பிரயோகம் நடக்கையில் அகதிகள் அமைதியுடன் உட்கார்ந்திருந்தனர். பிறகு அமைதியாகக் கலைந்து சென்றனர். துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பிறகு அதிகாரிகள் நடந்து கொண்ட முறை மனித ஒழுக்கத்துக்கு புறம்பானது. காலை எட்டு மணிவரை காயமுற்றவர்களுக்கு சிகிச்சை செய்ய ஒரு டாக்டரும் அனுப்பப்படவில்லை. மறுநாள் நகர பிரமுகர்கள் வற்புறுத்தலின் பேரில் ஒரே ஒரு டாக்டர் அனுப்பப்பட்டார்.

ஆஸாத்சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

துக்லக்கின் சமத்துவம்.

அரசாங்க காரியங்களில் உலமாக்கள் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில் தேசத்தின் பிரச்னைகளில் ஹிந்து, முஸ்லிம் என்ற வித்தியாசம் இருக்கவில்லை. ஒருவித உரிமைகள் இருவருக்கும் இருந்து வந்தன. இருவரும் ஒரே மாதிரியாகவே நடத்தப் பட்டனர். இதை இந்தியாவின் பிரபல எழுத்தாளரும் சரித்திர ஆசிரியருமான பண்டித சுந்தர்லால் தெளிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார்.

"அக்பர், ஜஹாங்கீர், ஷாஹெஜஹான் காலத்திலும் பிறகு ஔரங்கஜேப்பும் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவர்களின் காலத்திலும் கூட ஹிந்து முஸ்லிம்கள் ஒரேவித அந்தஸ்து வகித்து வந்தார்கள். இரண்டு மதங்களும் கவுரவிக்கப்பட்டு வந்தன. மதத்தின் காரணமாக யாருக்கும் எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை. ஒவ்வொரு அரசன் காலத்திலும் ஹிந்து தேவாலயங்களுக்கு ஏராளமான ஜாகீர்களும் கொடைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன" ('ரோஷன் முஸ்தக்பில்' பக்கம் 24)

சுல்தான் முஹம்மது பின் துக்லக்கின் பெயரை கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது. அவனுடைய பிரசித்தி, கப்பீரம், பராக்கிரமம், சரித்திரம் படித்த ஒவ்வொரு மாணவனுக்கும் தெரிந்திருக்கும். பிரபல யாத்ரீகனான இப்னெபதூதா தான் நேரில் கண்ட அவனைப்பற்றிய ஒரு சம்பவத்தை எழுதியிருக்கிறான் அதை கீழே தருகிறோம்.

தன்னுடைய மகனை அகாரணமாய் அடித்ததாக ஒரு தடவை துக்லக் மீது ஒரு ஹிந்து தாவா தாக்கல் செய்தான். அரசனுக்கு சம்மன் அனுப்பி குற்றவாளி கூண்டில் நிறுத்தி காஜி (நீதிபதி) விசாரணை நடத்தினார். அரசன் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு அரசன் மீது பதில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. சுல்தான் முஹம்மதுபின் துக்லக் எவ்வித ஆக்ஷேபணையுமின்றி நீதிபதியின் தீர்ப்புக்கு இணங்கினார்.

நீதிபதியின் தீர்ப்புப்படி அரசன் ஹிந்து பையனை தர்பாரில் அழைத்து அவனுடைய கையில் பிரம்பைக்கொடுத்து "பிடி! என்மீது பழியை தீர்த்துக்கொள்" என்று கூறினான். "நான் உன்னை எவ்விதம் அடித்தேனோ நீயும் அவ்விதமே என்னை அடி" என்று அரசன் ஆணையிட்டுக் கூறினான் பையன் அரசனை பிரம்பினால் இருபத்தோரடி அடித்தான். ஒரு அடியில் அரசனுடைய தலைப்பாகையும் கீழே விழுந்தது. இதை நான் நேரில் பார்த்தேன்."

—(இப்னெபதூதா யாத்திரைக் குறிப்பு, பக்கம் 120)

ஒருவனுக்கு அரசாங்கத்தின் மீது பரிபூரண நம்பிக்கை ஏற்பட நீதியும் நியாயமுமே தூண்டுகோலாகும். முஸ்லிம் அரசர்கள் உலமாக்களின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததால் ஜாதி, மத, வித்தியாசமின்றி பிரஜைகளுக்கு அவர்கள் மீது நம்பிக்கை இருந்து வந்தது. சில சந்தர்ப்பங்களில் எதிர்ப்பும் கிளர்ச்சியும் தோன்றியிருப்பினும் அதுமதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

அரசாங்க உத்தியோகங்கள் பதவிகள் பெறுவதில் தங்களுடைய வகுப்பாருக்கு இருந்து வரும் வசதிகளை மற்றவர்களுக்கும் அளிப்பதே ஒருவகுப்பாரின் நம்பிக்கையைப் பெறுவதற்கான சிறந்த வழி. தேசத்தின் நிர்வாக விஷயங்களில் எவ்வித வேற்றுமையும் பாராட்டப்படக் கூடாது.

"ஒரு வகுப்பார் மீதுள்ள பகைச்சப்பு உங்களை நியாயம் வழங்காமலிருக்கும்படி நிர்ப்பந்திக்காமலிருக்கட்டும். நீங்கள் எச்சந்தர்ப்பத்திலும் நியாயத்தையே செய்யுங்கள். பரிசுத்த வாழ்க்கைக்கு அதிக சமீபமாயுள்ளது அதுதான்" —திருகுர்ஆன்

முகல் அரசர்கள் இத்துறையில் தங்களாலியன்ற அளவு வேற்றுமையின்றி நடந்தனர். சரித்திர ஏடுகள் அதை நிரூபிக்கின்றன. அக்பர், ஜஹாங்கீர், ஷாஹெஜஹான் மட்டுமின்றி வகுப்பு வெறியனென்று குற்றம் சாட்டப்படும் ஔரங்கஜேப் காலத்திலும் கூட நூற்றுக்கணக்கான ரஜபுத்திரர்களும் ஹிந்துக்களும் அரசாங்கத்தின் பெரும்பதவிகளில் இருந்து வந்தனர்.

"லௌகீக விஷயங்கள், அரசாங்ககாரியங்களுக்கு திறமை, தகுதி இவைகளே அடிப்படை. எவ்விதத்திலும் அதில் மதம் குறுக்கிடக் கூடாது" என்று தன்னை ஆட்சேபித்தவர்களுக்கு ஔரங்கஜேப் பலதடவை பதிலளித்திருக்கிறார்.

'ஆஸாத்'
பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
அப்துல் சலாம், ஈரோடு.

மலேயாவில் நடப்பதென்ன?

மலேயாவிடம் இந்தியா அனுதாபம் கொண்டிருப்பது இயற்கை. ஒரு காலத்தில் மலேயா விசால பாரதத்தின் அங்கமாகவும், எல்லையாகவும் இருந்தது. இன்றைக்கும் அங்குள்ள முஸ்லிம் சுல்தான்கள் 'ராஜா' க்களென்றே அழைக்கப்படுகின்றனர். சிங்கப்பூரை ரஜபுத்திரர்கள் நிர்மாணித்தார்கள். இதற்கு சிங்கப்பூரிலுள்ள மியூஸியத்தில் அனேக ஆதாரங்கள் இருக்கின்றன.

பர்மா, ஸையாம், மலேயாவை ஒட்டியிருக்கும் தேசங்கள். இவைகளின் வழியாகவே அன்று இந்திய கலாசாரமும் ஆட்சியும் மலேயாவுக்கு விஸ்தரித்தன. சமீபத்தில் ஸையாம் வழியாகத்தான் ஜப்பானும் மலேயாவைத் தாக்கிற்று. பூகோள ராணுவ அடிப்படையில் இந்தப்பிரதேசம் பூராவுமே இந்தியா சம்மந்தப்பட்ட வரை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆகையால் மலேயா சுவர்ணபூமியில் முன்பிருந்ததை விட அதிகமாய் தங்களை ஸ்திரப்படுத்திக்கொள்வதில் ஆங்கிலேயர்கள் முனைந்திருக்கின்றனர்.

சிங்கப்பூர் கப்பல் தளம்.

ஆங்கிலேயர்களை விட தந்திரசாலிகள் உலகத்தில் கிடையாது. சர்க்கரை தடவிய கத்தியால் இந்தியாவை (இந்தியா, கிழக்கு, மேற்குபாகிஸ்தான்கள்) மூன்று கூறுகளாக வெட்டி லார்ட் மவுண்ட் பேட்டன் பெயரும் புகழும் பெற்றுவிட்டார். யுத்தம் முடிந்ததும் சுதந்திர, ஜனநாயக இன்பக் கனவுகளைக் காட்டி மலேயாவில் தங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள ஆங்கிலேயா மலாய் மக்களுக்கு வலை வீசிவருகின்றனர். பல வருஷங்களின் உழைப்பாலும் பல கோடி ரூபாய் செலவாலும் நிர்மாணிக்கப்பட்டு ஜப்பானிய தாக்குதலை மூன்று நாட்கள் கூட சமாளித்து நிற்காமல் வீழ்ச்சியடைந்த சிங்கப்பூர் கப்பல் தளம் இன்று மீண்டும் வெகு துரிதமாக கட்டப்படுகின்றது.

கடந்த இரண்டு வருஷங்களாய் இரண்டுகோடி ரூபாக்கு மேல் செலவிடப்பட்டிருப்பதைக் குறித்து பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் கேள்விகள் வந்தன. சிங்கப்பூர் கப்பல் தளத்தின் முக்கியத்துவத்தை உத்தேசித்து செலவு செய்யவேண்டியது அவசியம் என்று சர்க்கார் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்ற மாதம் கூட ஒரு தொழிற்கட்சி மெம்பர் யுத்தத்துக்கு முன் சிங்கப்பூர் கப்பல் தளத்திற்காக முப்பதுகோடி சவரன் வீணாக்கப்பட்டதென்றும் இன்று மீண்டும் கோடிக்கணக்கான சவரன்கள்செலவு செய்வதற்குக் காரணமென்ன வென்றும் கேள்வி கேட்டார்.

சாம்ராஜ்யத்தை பலப்படுத்தும் கனவு.

'காமன் வெல்த்' 'ஜனநாயகம்' 'சுதந்திரம்' என்ற இனிமையான வார்த்தைகளால் மலேயாவில் மீண்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பலப்படுத்தப்படுகின்றது. 1941-ல சில தினங்களுக்குள் மறைந்துவிட்ட பிரிட்டிஷ் ஆதிக்கம் இன்று மீண்டும் தோட்டாக்கள், ஆகாய விமானங்கள், ராக்கெட் வெடிகளால் நிலைநாட்டப்படுகின்றது. பிரிட்டன் மட்டுமின்றி பிரான்ஸும் ஹாலண்டும் கூட இதே நாடகத்தை நடிக்கின்றன தங்கள் சுதந்திரக் கனவு நனவாகுமென்ற நம்பிக்கையுடன் ஜப்பானிய ஆதிக்கத்தை அகற்றுவதில் நேசநாடுகளுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்த தென்கிழக்கு ஆசிய மக்கள் இன்று அவநம்பிக்கையடைந்து மனமுடைந்து வருகின்றனர்.

யார் இந்த கம்யூனிஸ்டுகள் ?

ஒரு சில கம்யூனிஸ்டுகள் மலேயா பூராவிலும் படு கொலை நடத்திவருகிறார்களென்று பலவாரங்களாக பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. இந்தக் கம்யூனிஸ்டுகள் யார்? ரஷ்யர்களா? இதுவரை சிறை பிடிக்கப்பட்ட அல்லது சுட்டுத்தள்ளப்பட்ட ஏராளமானவர்களில் ஒருவன் கூட ரஷ்யன் இருப்பதாகத் தெரியவில்லை. ரஷ்ய கம்யூனிஸ்டுகளுடன் அவர்களுக்கு தொடர்பு இருக்கலாம். அவர்கள் அனைவரும் சீனர், மலாய் நாட்டினர் அல்லது இந்தியர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் தான் கம்யூனிஸ்டுகளா ?

துரதிர்ஷ்ட வசமாக கம்யூனிஸ்டுகளின் புத்திசாலித்தனமற்ற செய்கைகளால் இன்று கம்யூனிஸம் அல்லது கம்யூனிஸ்டுகள் என்ற வார்த்தை அரசியல் துர்பாஷையாகவே பாவிக்கப்படுகின்றது. கம்யூனிஸத்துடன் எவ்வித தொடர்புமில்லாத தேசிய, ஜனநாயக சுதந்திரவாதிகள் கூட கம்யூனிஸ்டுகள் என்று தீர்மானிக்கப்பட்டு ஈக்களைப்போல் கொல்லப்படுகின்றனர்.

பழைய ஆங்கிலேய விசுவாசிகள்

உண்மையில் அவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர் ஆங்கிலேயரின் பழைய விசுவாசிகள் இருக்கின்றனர். ஜப்பானியனை விரட்டியபிறகு நாடு சுதந்திரமடையுமென்ற நம்பிக்கையில் அவர்கள் சதா ஜப்பானிய ஆதிக்கத்தை எதிர்த்து கொரில்லாயுத்தம் செய்துவந்தனர். அவர்களுக்கு யுத்தகால சம்பளமும் அளிக்கப்படுமென்றும் அனேக ஆங்கிலேயர் உறுதியளித்திருந்தார்கள். காரியம் முடிந்தபிறகு, அணுகுண்டினால் அமெரிக்கா ஜப்பான் இடுப்பை

முறித்தபிறகு தங்கள் வாக்குறுதிகளை ஆங்கிலேயர்கள் காற்று வாக்கில் பறக்க விட்டுவிட்டனர்.

வாக்குறுதிகளை மீறுவதில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உலகத்திலேயே நிகரில்லை. மலேயாவின் சுதந்திரக் கிளர்ச்சியை மட்டந்தட்டுவதற்காக துப்பாக்கிகள், வெடிகள் ஆகாய விமானங்களைக் கொண்டு தன் பழைய நண்பர்களையே அழிப்பதில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முனைந்திருக்கிறது.

மலேயா ஆங்கிலேயர்களின் தங்கச்சுரங்கம். இங்கிருந்து உலகம் பூராவுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் பொறுமான ரப்பர், டின்முதலிய பொருள்கள் போகின்றன. அவையனைத்தும் ஆங்கிலேயர்களுக்கே சொந்தம். அங்குள்ள ஆங்கிலேய வியாபாரிகளும் சுரங்க முதலாளிகளும் ராஜா, மஹாராஜாக்களைவிட எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல. அவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக்கொடுக்கும் தொழிலாளிகள் முக்கால் நிர்வாணிகளாக தகிக்கும் வெய்யிலில் ரத்தத்தை வியர்வையாக்கி உழைத்து வருகின்றனர். பிரசாரத்தில் ஆங்கிலேயர் எப்பொழுதுமே மட்ட ரகம். ஆனால் மலேயா படுகொலையை மறைக்க செய்யப்படும் பிரசாரத்தைக் கேட்டு வியக்காமல் இருப்பதற்கில்லை.

ஏகாதிபத்தியம் தங்கு தடையின்றி மலேயாவில் செய்துவரும் படுகொலைகளுக்கு உவமையில்லை ஏராளமான பெண்கள், குழந்தைகள் ஆகாய விமானங்களிலிருந்து தாக்கப்படுவதை வெடிகள் இலக்குத் தவறி விழுந்துவிட்டதாக பிரசாரம் செய்யப்படுகின்றது.

கிளர்ச்சி அடங்குமா ?

கிளர்ச்சி பலமடைந்து விட்டது. மலேயா காடுகள் கிளர்ச்சிக்காரர்களுக்கு உற்ற நண்பர்களாயிருக்கின்றன. ஜப்பானியர்களுக்கும் இதே காடுகள்தான் உதவின. இன்றைக்கும் அமளிக்காரர்கள் காடுகளில் மறைந்திருந்தே கிளர்ச்சியை துடர்ந்து நடத்துகின்றனர். மலேயா கம்யூனிஸ்ட்கட்சி பலம் வாய்ந்திருப்பதாகவும் பொதுஜனங்கள் உதவி செய்யாதவரை கிளர்ச்சியை அடக்க முடியாதென்றும் ஆங்கிலேயர்கள் வெளியேறிவிட்டால் கம்யூனிஸ்டுகள் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வாரென்றும் மலேயாவிலுள்ள பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதுகின்றன. அதற்கு மாறாக ஐரோப்பியர்களுக்கு மட்டுமே ஆயுதங்கள் வழங்கப்படுகின்றனவென்று ஜனங்கள் குறை கூறுகின்றனர். இந்திய வியாபாரிகளிடம் தற்காப்புக்கான ஆயுதங்களுமில்லை. பகல் நேரத்திலும் கூட அவர்கள் பாதி கதவுகளை திறந்தே உட்காருகின்றனர். சிலர் கடத்தப்பட்டதைத் தவிர இதுவரை எந்த ஒரு இந்தியனும் கிளர்ச்சிக்காரர்களால் கொல்லப்பட்டதாகவோ கொள்ளையடிக்கப் பட்டதாகவோ தெரியவில்லை.

பல சிறந்த
அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்
கைபிடியுடன்
அழகிய
கலர் கேஸ்
மிகவும்
உறுதியாக
தயாரிக்கப்
பட்டவை.
ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்
மவுண்டு ரோடு, சென்னை.
அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.

ஸிலோன் முழுவதற்கும்
'ஆஸாத்' ஏஜெண்ட்
மெஸ்ஸர்ஸ்
எம்மல் & கோ.,
ஜெனரல் மர்ச்செண்ட்ஸ் & கமிஷன் ஏஜெண்ட்ஸ்
காம்போலா,
ஸிலோன்.

நமது ஏஜெண்டுகள்
G. அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு,
திருச்சி.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.